# ஐக்கியதீபம்

திங்கள் AIKIYATHEEPAM இதழ்

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை - JAFFNA DISTRICT CO-OP. COUNCIL

தீபம் - 54 யூலை - 2003 ஒலி - 70


ஐக்கியதீபம்

## சிந்தனைச் சுடர்

சோசலிச பொருளாதார திட்டத்தை உருவாக்கும் பணியில் கூட்டுறவு இயக்கம் தலைசிறந்த பங்கு வகிக்கிறது. சாதாரண மக்களின் நல்வாழ்விற்காக இந்த இயக்கத்தில் உள்ள அனைவரும் பணிபுரிவதில் நிர்வாகத்திலும், தன்னலமற்ற சேவையிலும் முன்மாதிரியாக விளங்கவேண்டும்.

டாக்டர் இராதாகிருஷ்ணன்

## சர்வதேச கூட்டுறவாளர் தினத்தில்

# கூட்டுறவு தொடர்பான பிரசாரங்களை கிராமப்புறரீதியில் மேற்கொள்ள வேண்டும்

## கூட்டுறவுச் சபைத் தலைவர் வேண்டுகோள்

**வருடந்தோறும் யூலை மாதத்தில் வரும் முதலாவது சனிக் கிழமையில் சர்வதேச கூட்டுறவாளர் தினமாக சர்வதேச நாடுகளில் வாழுகின்ற பலகோடிக் கணக்கான மக்களினால் உணர்வு பூர்வமாகக் கொண்டாடப்படுகின்ற தினமாகும்.**

இவ்வாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு.பெ. கனகசபாபதி 81 ஆவது சர்வதேச கூட்டுறவாளர் தினத்தையொட்டி விடுத்த செய்தியில் கூறியுள்ளார்.

அச்செய்தியில் அவர்மேலும் கூறியிருப்பதாவது,

இங்கிலாந்து தேசத்தில் ரொச்டேல் முன்னோடிகளினால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு இயக்கம் உலகின் பல்வேறு நாடுகளில் விஸ்தரித்து இன்று சர்வேதச தினமாக அனுஷ்டிக்கப்படுகிறது.

இத்தினத்தில் கூட்டுறவுக்கொள்கைகள் யாவும் நாட்டு மக்களினால் முன்னெடுத்து செல்லப்பட்டு கூட்டுறவு இயக்கம் தெடர்பாக பிரசாரங்கள் உலகின் மூலைமுடுக்கெல்லாம் நடைபெறுவதுவழக்கம். இலங்கையைப் பொறுத்தவரையில் குறிப்பாக யாழ். குடாநாட்டு மக்களைப் பொறுத்தளவில் அங்குள்ள பல்வேறுகூட்டுறவு அமைப்புகளினா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கோழிக்குஞ்சு பொரிக்கும் உற்பத்தி நிலையம் கைமாற்றம்

யாழ். மாவட்ட கிராமிய வங்கிகளின் சமாசத்தினால் அச்சுவேலி கைததொழில் பேட்டையில் நடத்தபபட்டு வந்த கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தை திருநெல்வேலியில் உள்ள யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் (வ/கி) யாழ். அரச அதிபர் ஆகியோரின் பெரு முயற்சியினால் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் இயங்கிவந்த கோழிக்குஞ்சு பொரிக்கும் உற்பத்திநிலையம் யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வினைத்திறன் மிக்க பணியாளர்களை

# உருவாக்குவதற்கு கூட்டுறவுச்சபை சங்க பணியாளர்களுக்கு பயிற்சியளித்து வருகிறது

யாழ். மாவட்டத்தில் படித்துவிட்டு வேலையற்றிருக்கும் இளைஞர்களும் யுவதிகளும் அவர்கள் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு உதவக்கூடிய வகையில் பல்வேறு பயிற்சிகளை யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை மேற்கொண்டு வருகிறது.

இதனடிப்படையில் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களில் வளர்ந்துவரும் கணனித் தொழில்நுட்பத் துறையை கூட்டுறவுப் பணியாளர்களுக்கு புகுத்தும் வகையில் கணனிப் பயிற்சியை அவர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)





**81 ஆவது சர்வசே கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் உபதலைவர் திரு.ச.முருகநேசன் வானவில்லை ஒத்த கூட்டுறவுக் கொடியை ஏற்றுவதையும், மகளிர் கூட்டுறவுக் கீதம் இசைப்பதையும் படங்களில் காணலாம்.**

## கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு

# சேவைகள் புரிந்த, புரிகின்ற கூட்டுறவாளர்களை கூட்டுறவுத் திணைக்களம் கௌரவிக்க ஏற்பாடு

சர்வதேச கூட்டுறவாளர் தினத்தை முன்னிட்டு கூட்டுறவு இயக்கத்துக்கு தொண்டுகள் புரிந்த, புரிந்துவருகின்ற கூட்டுறவாளர்களை மாவட்ட, மாகாண மட்டத்தில் கௌரவிப்பதற்கு வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர்திரு.இ.இளங்கோவன நடவடிக்கை எடுத்துள்ளார்.

கூட்டுறவு இய்க்கத்துக்கு தொண்டுகள் புரிந்துவருகின்ற கூட்டுறவாளர்களை இனங்கண்டு மாகாண, மாவட்ட மட்டத்தில் கௌர விப்பதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தின் மீது நம்பிக்கையையும், ஆர்வத்தையும் மீளக் கட்டியெழுப்பலாம் என கூட்டுறவுத்திணைக்களம் கருதுவதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

மாவட்ட மட்டத்தில் கௌரவிக்கப்பட வேண்டிய கூட்டுறவாளர்களை, உறுப்பினர்களை சேர்ப்பதற்கான குழுவினாலும் மாகாண மட்டத்தில் கௌரவிக்கப்பட வேண்டிய கூட்டுறவாளர்களை கூட்டுறவுத் திணைக்களத்தினால் அமைக்கப்படும் குழுவினாலும் தெரிவு செய்யப்படுவர் என்றும் இத் தெரிவுக்கான அடிப்படை அம்சங்கள் பண்புகள் தொடர்பாக சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கும் சுற்று நிருபத்தின் மூலம் அறிவித்துள்ளார்.

**உள்ளே...**

கே.எஸ்.ஆனந்தனின்

**புரியாத அர்த்தங்கள்**

**சர்க்கரை நோய்க்கு**

**இனிப்பு வைத்தியம்**

**கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப வரலாறு**

*இன்றைய கூட்டுறவின் நிலையும் ...*

## விபத்து ஓய்வூதியம் வழங்க

# கூட்டுறவு அ.உ.ஆணையாளர் அனுமதி

வடமாகாண தெங்கு, பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் தனது அங்கத்துவ சங்கங்கள் ஊடாக தெங்கு பனம்பொருள் வல்லுநர்களுக்கு விபத்து ஓய்வூதியமாக சுமார் 72ஆயிரத்து 708 ரூபாவினை வழங்குவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப.தெ. வளம்) திரு.எஸ்.கணேசமூர்த்தி அனுமதி வழங்கியுள்ளார்.

விபத்து ஓய்வூதியம் பெறுவோரின் விபரம் வருமாறு:-

**சங்கானை**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

வெ.நடராசா 1000 ரூபா, த. புலேநதிரன் 1000 ரூபா, செ.தர்மலிங்கம் 5000 ரூபா.

**கோப்பாய்**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

க.பொன்ராசா 1000ரூபா, நாகலிங்கம் 6825ரூபா, மா.செலத்துரை 3933 ரூபா.

**அச்சுவேலி**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

நா.செல்வநாயகம் 1000ரூபா,

**யாழ்ப்பாணம்**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

வி.சின்னத்தம்பி 2382 ரூபா
க.செல்வராசா 4633 ரூபா.

**கோண்டாவில்**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

மா.நாகராசா 500 ரூபா, அ. பரமேஸ்வரன் 3102 ரூபா, சி.பாலசிங்கம் 1000 ரூபா.

**ஊர்காவற்றுறை**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

பி.மனுவேல் 1000 ரூபா, க. இராசதுரை 1000 ரூபா, ச.அருமைத

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபமும் அதன் வரலாறும்

வடபகுதிக் கூட்டுறவு இயக்கம் தொடர்பான கூட்டங்கள், வருடாந்த மகாநாடுகள் என்பன ஆரம்பத்திலிருந்து யாழ்.றீகல் படமாளிகை, யாழ். மாநகரசபை மண்டபம், மத்திய கல்லூரி முதலிய இடங்களில் நடைபெற்று வந்தன. கூட்டுறவாளர்களுக்கென அதிலும் மேற்பார்வை சபைக்கென ஓர் கூட்ட மண்டபமும் அதற்கான காரியாலயமும் அமைக்க வேண்டுமென 1962ல் நடந்த கூட்டுறவாளர் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. மேற்கொண்டு வேண்டியன விரைந்து செய்யப்பட்டு, அப்போது இருந்த கூட்டுறவு ஆணையாளர் அவர்களால் அத்திபாரம் இடப்பட்டு நான்கு மாடிகள் கொண்ட கட்டிட வேலைகள் ஆரம்பமாகி நடந்தன. (இக் கட்டிடம் கட்ட வங்கியில் பணம் கடனாக பெற்றிருந்தாலும் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் வருடாந்த



கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்

லாபத்தில் ஒருபகுதியினை வடபகுதி ஜக்கிய மேற்பார்வை சபைக்கட்டிட நிதியாகக் கொடுத்த பணமே ஆரம்பநிதியாகக் கொண்டு கட்டிட வேலைகள் ஆரம்பமாகின.)

இருபத்தைந்து ஆண்டுகள் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச்சபை தலைவராகவும் இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் ஆரம்ப தலைவராகவும் இருந்த கூட்டுறவுத் தந்தை என தென்னிலங்கை கூட்டுறவாளர்களினால் போற்றப்பட்ட வருமாகிய வி.வீரசிங்கம் அவர்கள் 05.12.1964ல் அமரரானார். அமரரின் நினைவு அஞ்சலிக் கூட்டம் யாழ். மாநகர சபை மண்டபத்தில் 18.12.1964ல் ஐக்கிய மேற்பார்வைச்சபை உப தலைவர் திரு.இராஜரட்ணம அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில கலந்துகொண்ட கூட்டுறவாளர்கள் அமைக்கப்படும் புதிய கட்டிடத்திற்கு ''வீரசிங்கம் ஞாபகார்த்த மண்டபம்'' என பெயர் சூட்ட வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானித்தனர்.

இக்கட்டிட வேலைகள் பூர்த்தியாகி 27.11.1968ல் அப்போதைய கூட்டுறவாக்க ஆணையாளரும் தென்கிழக்காசியாவிற்கான பிரதிப் பணிப்பாளருமாகிய வீரமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## பயிற்சி வகுப்பு

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சங்க உபதலைவர் திரு.கெ.மகேஸ்வரன் தலைமையில் பணியாளர்களுக்கான பயிற்சி வகுப்பொன்று நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் கிளை பணியாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், லிகிதர்கள் மற்றும் பயிற்சி லிகிதர்கள் உட்பட 68பணியாளர்கள் கலந்துகொண்டனர். யாழ்மாவட்ட கூட்டுறவுச சபையின் கல்வி பயிற்சியளிப்பு உத்தியோகத்தர் திரு.வி.கே.சிவராசசுந்தரம் ''சங்க அபிவிருத்தியும் பணியாளர் பங்கு'' என்னும் தலைப்பிலும் யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை செயலாளர் திரு.சு.சிவசுப்பிரமணியம் ''விற்பனை அபிவிருத்திக்கு பணியாளர்கள் பங்கு'' என்னும் தலைப்பிலும் கருத்துரை வழங்கினார்கள்.

சங்க பொது முகாமையாளரின் கருத்துரையுடன் பயிற்சி வகுப்பு நிறைவெய்தியது.

## நீங்களும் எழுதலாம்

கூட்டுறவு அமைப்பு அங்கத்தவர்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளைச் சொல்கின்றதா? என்கிற கூட்டு றவாளர்களின் உள்ளக் கிடக்கைகளை வெளிக்கொணர ''ஐக்கிய தீபம்'' களம் அமைத்துள்ளது

இங்கு ஒரு கூட்டுறவாளனின் கருத்துப் பிர சுரிக்கப பட்டுள்ளது. உங்கள் கருத்துக்களையும் சுருக்க மாக எழுதி அனுப்புங்கள். நீங் கள் அனுப்பும் ஒழுங்கின் பிரகாரம் பிரசுரிக்கப்படும்.

### அரசியலில் ஈடுபாடற்ற முற்போக்கு சிந்தனையுள்ள

## இளைஞர்கள் கூட்டுறவில் இணைய முன்வரவேண்டும்

இன்று திறந்த பொருளாதார கொள்கையாலே கூட்டுறவு நிறுவனங்கள் போட்டி போட்டு வியாபாரத்தை நடத்த வேண்டிய நிலையில், தனது அங்கத்தவர்களுக்கு சலுகையோ அல்லது இலாபப்பங்கீடோ வழங்க முடியாத நிலை உள்ளதாக கூறலாம். ஆனால் இதுவரை கூட்டுறவு அமைப்பு தனது செயற்பாட்டில் எத்தகைய மாற்றத்தை செய்ய வேண்டும் என்று கூட்டுறவை வழிநடத்திச் சென்றவர்கள் சிந்தித்தார்கள்? ஏன் லாபம் வரவில்லை. ஏன் அங்கத்தவர்கள் இணையவில்லை. இதற்கு என்ன நடவடிக்கை மேற்கொண்டார்கள். சங்கத்தை வழிநடத்துபவர்களுக்கு எத்தனை அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள் என்பது தெரியாத விடயம். வேறு, கருத்தரங்கு வைத்தவர்களா, ஆய்வு மேற்கொண்டார்களா? வருடாந்தம் வரவு செலவுத் திட்டம் தயாரிக்கின்றார்கள். திட்டத்தின்படி வரவை பார்க்கமாட்டார்கள். செலவு செய்பவர்களும் ஒரு மனிதனுடைய உழைபபைவிட அவனின் சேமிப்புத் தன்மையில் தான் அவன்வளர்ச்சி தங்கி இருக்கின்றன.

ஒவ்வொரு தனி மனிதனின நிறுவனங்களும் வளர்ச்சி அடைந்திருக்கின்றன. ஆனால் கூட்டுறவு அமைப்பு இன்றும் கூப்பன் கடை நிலையில்தான் இருக்கின்றன. இதைமாற்ற வேண்டும்.

கூட்டுறவு அமைப்பிடம் வளம இருக்கின்றன. ஆனால்சரியாக பயன்படுத்தப்படவில்லை. அதற்கு மாறாக ஒவ்வொருவரும் தங்களை பிரமுகர்கள் ஆக்கிக்கொள்வதற்கு கூட்டுறவை நன்கு பயன்படுத்தி இருக்கின்றார்கள். ஆனால் அதன அங்கத்தவர்களின் வாழ்வை வளம படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை.

நலிவடைந்த மக்களுக்குக் கைகொடுக்கும் அமைப்பான கூட்டுறவில் முன்நோக்கு சிந்தனையாளர்கள் கூட்டுறவை வழிப்படுத்த முன்வரவேண்டும். இதன் 5ல் கூட்டுறவில் இணைபவர்கள் நாளையே பெருகுவார்கள்.

**''பதவி எம்மால் சிறப்படைய வேண்டும்**
**பதவியால் நாம் சிறப்படை யக் கூடாது''**

## புலமைப்பரிசில் வழங்கி மாணவன் கௌரவிப்பு

அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக கூட்டம் கடந்த மாதம் 19ம் திகதி சங்கத்தலைவர் திரு.செ.காந்தராசா தலைமையில் நடைபெற்றது.

முதன்மை விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திரு.பொ.சிவலிங்கம், தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவு இணைப்பாளர் திரு.இ.இலங்கன் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக வடமாராட்சி கொத்தணித்தலைவர் திரு.க.குணராசா, சமாசத்தலைவர் திரு.இ.தவராசா, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திரு.இ.விஜயமோகனராசா, திரு.சி.குணாளன, திரு.க.கமலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள்.

இந்நிகழ்வில் 2002ம் ஆண்டு 5ஆம்ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த சதாசிவம்-கலையுகன் (ஆவரங்கால் மகாஜன வித்தியாசாலை மாணவன்) என்பவருக்கு புலமைப்பரிசில் நிதியாக 2000/-க்குரிய காசோலையை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (கணக்காய்வு) திரு.பொ.சிவலிங்கம் வழங்கினார். சங்கப் பொது முகாமையாளர் திரு.வ.திருஞானசம்பந்தரின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவுற்றது.

### புதிய இயக்குநர்கள் தெரிவு

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய தலைவராக திரு.பெ.கனகசபாபதி ஏகமனதாக மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இம்மாதம் முதலாம் திகதி நடைபெற்ற பொதுச்சபைக் கூட்டத்தில் திரு.பெ. கனகசபாபதி தலைவராகவும், சி.பத்மராசா உபதலைவராகவும் மற்றும் இயக்குநர்களாக திருவாளர்கள் கா.பாலசுப்பிரமணியம், க.பழனிவேற்பிள்ளை, த.துரைமணி, ந.சிவராசா, ச.கமலராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

* *

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் புதிய இயக்குநர்சபை தலைவராக திரு.ப.கனகலிங்கம் (தலைவர் புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) உபதலைவராக திரு.ம.சிவசுப்பிரமணியம் (சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இயக்குநர்களாக திருவாளர்கள் சி.வி.கே.சிவஞானம்(யாழ்ப.நோ.கூ.சங்கம்) சி.குமரவேல் (சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்) சி.சிவமகாராசா(தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்) மா.செல்வராசா (மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம்) கு.கந்தசாமி (அளவெட்டி, மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்) ஜெ.சுஜிந்திரன், து.சுவேந்திரராசா (இருவரும் 18-35 வயதுக்கிடைப்பட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் நியமனம்)

### புதிய பொதுமுகாமையாளர்

வடமாகாண பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் புதிய பொது முகாமையாளராக திரு.பொ.செல்வராசா நியமனம் பெற்றுள்ளார்.

அச்சுவேலி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கணக்காளராக பணியாற்றிய திரு.பொ.செல்வராசா பதவியுயர்வு பெற்று சமாசத்தின் பொதுமுகாமையாளராக இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார்.


நீங்களும்
**ஐக்கிய தீபம்**
சந்தாதாரர் ஆகிவிடுங்கள்

**சந்தா விபரம்:**
01 - வருடம் - 110.00
06 - மாதம் - 55.00
(தபால்செலவு உட்பட)

**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

ஆசிரியர்
''ஐக்கிய தீபம்''
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆம்மாடி,


### எழுதுங்கள்... எழுதுங்கள் வரவேற்கிறோம்

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் வெளியிடப்படும் ஐக்கிய தீபம் திங்கள் இதழுக்கு உங்களுடைய ஆக்கங்களை - கதைகளாக, கவிதைகளாக, துணுக்குகளாக, பொது அறிவு சமபந்தமான விடயங்களாக பல்சுவை விருந்தளிக்கக் கூடிய வகையில ஒவ்வொரு மாதமும் 10ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். தரமானவை பிரசுரிக் கப்படும்.

மற்றும் சங்க நிகழ்வுகள் தொடர்பான செய்தி கள், படங்கள் ஆகியவற்றையும் அனுப்பி வைக் வும்.

**வந்துசேரவேண்டிய முகவரி**

ஆசிரியர்
''ஐக்கிய தீபம்''
யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை,
கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டப 2ஆம்மாடி,
இல.12,காங்கேசன் துறைவீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத அர்த்தங்கள்

ப்ரணா

# தொடர் நாவல்

2

ஒரு முட்டாளை என் [illegible]ாகக் கொள்வதைக காட்டிலும் [illegible]சிறந்த அறிவாளியை என் விரோதியாக பெற்றுக் கொள்ள நான் தயார்... ஷா...

நாம் சில சமையங்களில் தவறான கருமங்களை தெரிந்து கொண்டே செய்வதுண்டு தெரியாமல் செய்வது தற்செயல் நிகழ்ச்சிகளை தவறானது என்று எடுத்துக் கொள்ளலாம். இவை மன்னிக்கப்பட வேண்டியவை தெரிந்து கொண்டு செய்யும் தவறுகள் தண்டிக்கப்பட வேண்டியவையாகும். இக்கருத்தினை விளக்கமாக மாணவ மாணவிகளுக்கு புரியும் வண்ணம் உதாரணம காட்டி படிப்பித்கொண்டிருந்தாள சௌந்தர்யா. பாடசாலை ஆரம்பித்து முதல் பாடம் முடிகிறவேளை அப்பொழுதுதான் பாடசாலைக்குள் காலடி எடுத்துவைத்த திருமதி செல்லையா இவள் பாடம் நடத்துவதை பார்த்துக் கொண்டிருந்தாள.

மணி அடித்ததும் சௌந்தர்யா வகுப்பை விட்டு வெளியேவர எதிர் கொண்டாள திருமதி செல்லையா.

'குட்மோனிங் ரீச்சர்...'

'குட்மோனிங், குட்மோனிங்' இந்த காலநிலையில் யார் யாரை மதிக்கிறார்கள் சும்மா முகஸ்துதிக்காகச் சொல்லவில்லை இந்த ஸ்கூலல் நீரும அதிபரும் தான் என்னைப் பார்த்து குட்மோனிங் சொல்லுகிறீர்கள. அது சரி பிள்ளை இந்த ஸ்கூல் பிடித்திருக்கா? என்று ஒரே கேள்வியாய் கேட்டார்.

"என்னவோ ரீச்சர் என்னைப பொறுத்தளவில் சூழலை பார்க்கையில் நான்றாகப் பிடித்துள்ளது."

"நான் இங்க நான்கு வருடமாய் குபபை கொட்டுறன் இதுகளுக்கோ ஆணி வைச்சு அடித்தாலும் படிப்பு ஏறாது. எங்கடை சக்தி வேஸ்ட் ஆகிறது தான் மிச்சம்"

"அதுக்குத்தானே சம்பளம் வாங்குகிறோம் என்று சிரித்தாள் சௌந்தர்யா"

"நீர் நல்லாய் சிரியும் உடம்புக்கு நல்லம். இப்ப படிப்பித்ததை கேட்டுக் கொண்டுதான நின்றனான். எருமைக்கு மேல் பெய்த மழைதான் எல்லாம்"

நாங்கள் மனச்சாட்சிக்கு விரோதம இன்றி எமது கடமையை செய்ய வேண்டும். படிப்பறிவு குறைந்த சமூகத்தில் இருந்து வந்த பிள்ளைகள். கிரகிக்கும் ஆற்றல் குறைவுதான் ஆனால இப்படியே வட்டுவிடவும கூடாது. படிக்க கூடிய பிள்ளைகளும் இருகக கிறார்கள்"

"என்னவோ பிள்ளை உங்களுக்கு வயது குறைவு அனுபவம்போதாது என்னவோ சொல்லவேண்டியதை சொல்லிவிட்டேன் எனி உன்பாடு"

என்று கூறிக்கொண்டு திரும்ப அதிபர் முருகையாவும் அவ்விடம் வந்து சேர்ந்தார்.

"குட்மோனிங் ரீச்சர் இப்பதான் வந்தனீங்களோ இன்னும் கையெழுத்திட வில்லை. அந்தப் பிள்ளைகளுக்கு வகுப்பிற்கு இடையில் நீங்கள் வைத்து பிரசங்கம் செய்தால் எப்படி?" என்று சிரித்துக் கொண்டே அவர்களை விலக்கிக் கொண்டு மறுபுறம் சென்றார். நான் தான் முறைப்படி இங்க அதிபராய் வரவேண்டும். இவன் யாரையோ அதிபராக்கி விட்டான். ஆனால் எனக்கு கொஞ்ச மரியாதை. கதையை பார்த்தியோ. நைஸ்சா வாழைப்பழத்தில் ஊசி எற்றினமாதிரி ஏற்றிவிட்டுப் போறான்"

என்று கூறிக்கொண்டிருக்கையில் வெளிவாசலில் மோட்டார் சைக்கில் ஒன்று வந்து நின்றது.

"யாரோ வருகினம் வகுப்பிற்கு போகிறேன் ரீச்சர்" என்று புறப்பட்டாள் சௌந்தர்யா

"நீர் ஏன் பயப்பிடுகிறீர் நான்



இருக்க என்ன பயம்"என்றுதிருப்பியவர் அட தம்பி நீயோ நான் யாரோ

## கே.எஸ். ஆனந்தன்

என்று நினைத்தேன் எப்படி சுகமாய் இருக்கிறீயோ? அப்பா, அம்மா சுகமோ" என்று கதைக்க ஆரம்பிக்கவும் சௌந்தர்யா அந்த இடத்தை விட்டு நழுவிக் கொண்டாள்.

எதிரே அதிபர் முருகையா சிரித்துக் கொண்டு வந்து 'எப்படி அம்மா தப்பி வந்தீர் என்றார்'

'யாரோ ஒருவர் மோட்டார் சைக்கிளல் வந்து மாட்டிக் கொண்டார்.

நான் நளுவிக் கொண்டேன்' என்று சிரித்தாள்.

"இப்படிப்பட்டவர்கள் ஏன்தான் படிப்பிக்க வருகிறாங்களோ தெரியவில்லை. பிள்ளைகள் எல்லாம் வெளிநாடு. இரண்டாம் கட்டையடியில் இருக்கிற கடைப்பேலி இவர்களுடையது. இருபத்தைஞ்சு ஏக்கர் வயல் இருக்கு. இந்த மனிசி இங்கவந்து எங்கட உயிரை வாங்குது. பென்ஷன் எடுக்கலாம். எக்ரெஞ்சன் எடுத்துக் கொண்டு பழுதாக்கிக் கொண்டு திரியுது"

"நீங்கள் கண்டிக்கவேண்டும் சார்"

"வயதுக்குக் மூத்தவ அவர் என்னுடன் நல்ல குளோஸா பழகுறவர். அவரிடமும் சொல்லிப்பார்தன். வீட்டிலிருந்தாலும் தொல்லை தான நீயும் கொஞ்ச நேரம் உலைஞ்சு பாரேன் என்று அந்தாள் சிரிக்குது. என்ன செய்கிறது என்று எனக்கே தெரியலை"

"டிப்பாட் மெண்டிலை......."

"மனிசிக்கு எங்கேயும் நல்ல செல்வாக்குண்டு. பார்த்தரே இன்னும் கையெழுத்தே போடலை. நான் மனறாடித்தான் போடுவிக்கனும். இப்படி இருக்கு நிலமை" என்று கூறிக் கொண்டே சென்றார் அதிபர்.

கடமையில் இருந்து கொண்டே செயற்படாது அதனை உதாசீனம செய்வதுடன் மற்றவர்களையும தெரிந்து கொண்டே கடமையைச் செய்ய விடாது காலத்தை கடத்துபவர்கள் திருமதி செல்லையா போல எத்தனையோபோ இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களை இனம் கண்டு களைந்து எடுக்கவேண்டும் இல்லையெனில் இளம் சமுதாயத்தின் வளர்ச்சி பின்னடைவையே காண நேரிடலாம். என்று எண்ணியவளாய் தன் வகுப்பிற்குள் நுழைந்த சௌந்தர்யாவை "குட்மோனிங்ரீச்சர்' என்ற மழலை ஒலிகள் சுயவுணர்வடையச் செய்தன.

"குட்மோனங் உட்காருங்கள்" என்று கூறி பாடத்தை ஆரம்பித்தாள்.

அன்று பௌர்ணமி தினம் படித்துக் கெண்டிருந்தாள் சௌந்தர்யா. நளினி எங்கேயோ சென்றுவீட்டு வந்து முகம் கழுவிவிட்டு துவாயால முகததைத் துடைத்துக் கொண்டே கேட்டாள்.

"ரீச்சர் இன்று பூரணை நிலவு பகல் போல இருக்கே. வெளியே எங்கேயும போகவில்லையா?"

"நீர் எங்கே போனனீர்?"

"கிளிநொச்சிக்கு"

"ஐயன் கோயிலடிக்கு போகலாமா?" என்று கேட்டுவிட்டு குழந்தையைப்போல் கும்மாளம் கொட்டிச்சிரிக்கும் சௌந்தர்யாவையே பார்த்துக் கொண்டு நன்றாள் நளினி.

"என்ன அப்படிப்பார்கின்றீர்?"

"என்னவாம்? அன்று பட்ட பாட்டை நினைச்சால் சிரிப்பாவரும்?"

"வேறு எப்படியாம்? என்றவள் நினைவில அன்று நடந்த காட்சி நிழற்படமாக விரிந்தது.

பூரணை நிலவு கறுப்பு வெள்ளை திரைப் படத்தில் வரும் நிழற்காட்சிகள் போல ஆட்கள் அங்குமிங்கும சிதறி ஓடுகின்றனர். தகங்ளை நோக்கி ஓர் உருவம் வருவதைக் கவனித்த சௌந்தர்யா

"யாரோ இங்கே வாரான்" என்றாள்.

"பயப்படாதே. இது தண்ணிச் சண்டையாய் தானிருக்கும். ஓவசியர் மார்க்கண்டு அண்ணர்மாதிரியிருக்கு" என்று அவன் முடிக்கவும்

"யாரது ரீச்சரோ. தங்கச்சி பயப்படாமல் வாருங்கோ. நான் உங்களை ஐயன்கோயிலடியில கண்டனான். இவர்கள் இப்படித்தான் நிலவு வந்தால் வெளிக்கிட்டு விடுவான் கள் களவாய் தண்ணி மறிச்சுக்கட்ட" என்று அவர்களைக் கூட்டி வந்துவாய்க்கால் மேட்டு வீதியில் விட்டிட்டு போனார்.

அந்தக் காட்சியை நினைக்கும் போதெல்லாம் சௌந்தர்யா சிரிப்பாள். சிரித்துக்கொண்டேயிருப்பாள்.

"நீர்படியும். அப்புறம் நளியாலை நான் படிக்காமலிருந்து விட்டன் என்று கூறப்கூடாது. எனக்கும் கொஞ்சம் வேலையிருக்கு" என்று கூறிவிட்டு சங்கத்திலிருந்து எடுத்து வந்த கோவை ஒன்றை விரித்துக்கொண்டு உட்கார்ந்தாள்.

இரவு உணவு உட்கொண்ட பின்பு இருவரும் வீட்டுக்கு முன் புறம் உள்ள வெளியில் இருந்து பலவேறுகதைகளும் கதைத்துக் கொண்டிருந்தனர். திருமதி செல்லையாவின் கதையைத் தொடக்கிளாள சௌநதர்யா.

"சௌந்தர்யா.அந்த மனிசியைப்பற்றி உமக்குத் தெரியாது. பொல்லாத ஆளப்பா. கவனமாய்ப்பழகும் எங்கடைசங் கத்துக்கு ஆள் வந்தால் எல்லோரும் சைலன்டாவேயிருப்பினம்"

"நீர் என்னப்பா மிரட்டுகிறீர்?"

"நல்லாள் மாதிரி கதைச்சு எங்கேயாவதுமாட்டிவிட்டு கூத்துப பார்ப்பா"

"நாங்கள் என்ன ஒன்றும் தெரியாத பாப்பாக்களா? என்று சௌந்தர்யா கேட்டாள்.

"உனக்குத் தெரியாது சௌந்தர்யா. எங்கடை சங்கத்திலை ஒடிட் கிளாக்காக நவிண்டில் பிள்ளை ஒன்று வேலை செய்தது. அந்தப்பிள்ளை இவவின்ரை மச்சாள் வீட்டில இருந்தது. மச்சாள்காரிககும் இவவுக்கும் அவ்வளவு ஒட்டமில்லை இந்த மனிசி மச்சாள்காரியை மானங்கெடுக்கச் செய்த வேலை தெரியுமே" என்று கதையைக் கூற சௌந்தர்யா பயத்தில 'நளினி அன்றொரு நாள்'' சௌந்தர்யாவின் கரத்தைப் பிடித்தாள். அவள்பூங் கரம் நடுங்கிக் கொண்டிருந்தது.

(வளரும்)

---

(சென்ற இதழ் தொடர்ச்சி...)

சிகிச்சை தொடங்கி எட்டாவது நாளில் ரத்த சக்கரை பரிசோதனை

# சர்க்கரை நோய்க்கு

பண்ணிக் கொள்ள வேண்டியது அவசியம் கண்டிப்பாக அநேக நீரிழிவு நோயாளிகள் தங்கள் ரத்தத்தில உள்ள சக்கரையின் அளவு குறைந்திருக்க காண்பார்கள். இதைத் தொடர்ந்து இரண்டு அல்லது மூன்று மாதங்கள் சாப்பிட்டு வரும் நோயாளிகளின் Random Blood Sugar அளவு 80லிருந்து 90mg%வரை குறைந்து காணப்பட வாய்ப்பு உள்ளது. (Normal Random Blood Sugar Level - 80to 120mg%)

இந்த இயற்கை வைத்திய சிகிச்சை முறையை மேற்கொண்ட யாருக்காவது ரத்தத்தில் சக்கரையின் அளவு மேற்கண்டபடி குறையாமல் காணப்பட்டால், அதற்கான காரணங்கள் - குறிப்பிட்டுத் தந்த நீலா உணவு அளவை சரியாகச் சாப்பிடாதது அல்லது அந்தக குறிப்பிட்ட அளவு அந்த நோயாளிக்குப் பொருந்தி வராது. அந்த அளவைப் பின்னர் கூட்டியோ குறைததோ மாற்றியமைக்க வேண்டிவரும். மே[illegible] பெறும நோயா[illegible] வேண்டிய உணவு [illegible]

## இயற்கை மருத்துவ முறை

நோயாளிகள் கடைப்பிடிக்க வேண்டிய உணவு பத்தியமுறைகளை, சரியாகப் பின்பற்றாதது. அடுத்து, இன்சுலின் மற்றும மாத்திரைகளைத் திடீரென்று நிறுத்தி விடுவது இவை முக்கியமான சில காரணங்களாகும்.

நீலா உணவு சாப்பிடும் நோயாளியின் உடம்பில் இன்சுலின் உற்பத்தி செய்யும் Beta Cellகளை மறுபடியும் உருவாக்குகிறது. இதனால், இன்சுலின் உடம்பில் இயற்கை யாகவே உற்பத்தி ஆகத் தொடங்குகின்றது. நோயாளிகளின் ரத்தச் சர்க்கரை அளவு படிப்படியாக குறைகின்றது.

மேற்குறிப்பிட்டது போல ரத்தச் சர்க்கரை 80 - 80mg% அளவுக்கு வரும்போது இன்சுலின் ஊசி உபயோகிப்பவர்கள் 5யூனிட் இன்சுலின் குறைவாகப் பயன் படுத்திக்கொள்ளலாம் மாத்திரை சாப்பிடும் நோயாளிகள் அரைமாத்திரையாகக் குறைக்கத் தொடங்கலாம்.

இவ்வாறு, படிப்படியாக நோயாளிகள் ரத்த சர்க்கரை அளவைப்பரிசோதனைகளைக் கொஞ்சம்கொஞ்சமாக குறைத்துக கொண்டு வந்து ஒரு நாளில் முற்றிலுமாக அவற்றை நிறுத்தி விடலாம்.

மாத்திரைகள் உட்கொண்டு வரும் நடுத்தர அளவு சர்க்கரை நோயாளிகள் சுமார் ஆறுமாதகாத்துக்குள் நீலா உணவு முறையை கடைப் பிடித்து சர்க்கரை வியாதியிலிருந்து நிரந்தர விடுதலையைக காணலாம்.

இன்சுலின் ஊசி போட்டுவரும் சர்க்கரை நோயாளிகள் சுமார் பத்து முதல் பன்னிரண்டு மாதம் வரை நீலா உணவு முறையை கடைப்பிடித்து சர்க்கரைவியாதியிலிருந்து நிரந்தர விடுதலையைக காணலாம்.

இதுவரை அலோபதி மருந்துகளை உபயோகிக்காத ஆரம்பநிலை சர்க்கரை நோயாளிகள், நீலா உணவு சிகிச்சையின் மூலம் விரைவில் குணமடைய வாய்ப்பு உள்ளது. ரத்தச் சர்க்கரை அளவைப் பரிசோதனை செய்து பார்த்தபின் நீலா உணவு சிகிச்சை முறையையும் நிறுத்தி விட்டு, எல்லோரையும் போல வாழ்நாடகளை மகிழ்ச்சியாக கழிக்கலாம் கழிக்கலாம்.

இந்த உணவு கிசிக் சையை மேற்[illegible]பிடிக்க வேண்டிய முறைகள்: [illegible] இனிப்பு வகைகள், கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய சில பத்திய முறைகள்:

சில பருப்பு வகைகள், இனிப்பு வகைகள், சில கிழங்கு வகைகள், சில பழ வகைள் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

சாப்பிடக் கூடியவை -அரிசி, கோதுமை உணவுகள், கோழக்கறி, ஆட்டு இறைச்சி, மீன் வகைள் எல்லா, பச்சைக் காய்கறிகள், கீரைகள், மது குடிக்கும் பழக்கம் உள்ளவர்கள ரெண்டு பெக் விஸ்கி மட்டும்சாப்பிடலாம்.

# இனிப்பு மருத்துவம்

### இச்சிகிச்சையின் பயன்கள்

1. உடல் பலவீனம, உடம்பு வலி, அடிக்கடி சிறுநீர் கழித்தல், பசியின்மை முதலியவை விரைவில நீங்குதல்.
2. உடலில் ஏற்படும் காயங்கள், புண்கள் சீக்கிரம்ஆறுதல்.
3. கால்கள், விரல்கள் வெட்டி நீக்கப்படுதல் தவிர்க்கலாம்.

-முற்றும் -

---

# இலக்கியக் காட்சிகள்

அபிராமி ஆனந்தன்



## தேடலும் மகிழ்தலும்

திரைகடலோடியும் திரவியம் தேடு என்பது முதுமொழி இன்று வானில் பறந்து போய் அயல்நாடுகளில் திரவியம் தேடுவோர் தான் தன் குடும்பம் என்று தாம் தம் தேடலின் பயனை அனுபவிக்கின்றனர். இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த சமூகத்தில் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்து ஒருநேரக் கஞ்சிக்கே வழியில்லாது திரவியம் தேடிப் புறப்பட்ட ஒருவன் தான் தேடிய அளப்பரிய செல்வத்தை எப்படி அனுபவிக்க வேண்டும் என தன் தலைவிக்குக் கூறுகின்றான் என்பதை சங்கச் செய்யுளான புறநாநூற்றில் ஓர் காட்சியைப் பார்ப்போம்.

அளப்பரிய செல்வத்துடன் வந்த தலைவன் தலைவியை (மனைவி) நோக்கி எமக்குக் கிடைத்த செல்வத்தைக் கொண்டு எங்கள் கடன்களை கொடுத்துவிடு கஷ்டப்பட்ட உற்றார் உறவினர், சூழலில் உள்ள வறியோர்க்கும் கொடு. நான் இல்லாத வேளையில் யாரும் வந்தால் நான் இல்லையே என்று எண்ணாது நீ விரும்பும் மகளிர், நல்ல குணமுடைய, கற்புடைய மகளிருக்கும் உறவு இல்லையென்று பாராது கொடு. எல்லோருக்கும் வறுமை நீங்கி வாழ்ந்தாலே நாமும் நல்லாக வாழலாம் என்று கூறுகின்றான். இப்படியான ஓர் தலைவனைப் படைத்துள்ள புலவனின் மன இயல்பு எப்படி இருக்கும் என்று வியப்புறும் வண்ணம் வாழ்ந்த சங்ககால தமிழ்பண்பு பற்றி இன்று யாராவது சிந்திக்கின்றார்களா? தமிழர்களின் வீரத்தைக் கூறும் புறநானூற்றில் இப்படி ஒரு கொடைச்சிறப்பையும் காண்கின்றோம்.

நின்னயந் துறைநர்க்கு நீநயத் துறைநர்க்கும்
பன் மாண் கற்பினின் கிளை முதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழ்நின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கியோர்க்கும்
இன்னோர்க் கென்னா தேன்னெடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்ந்து மென்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழலோயே

(புறநானூறு - 163)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மதுமேகம் (நீரிழிவு)

மதுமேகம் அல்லது நீரிழிவு எனப்படுவது உலகில் மனிதர்களுக்கு உண்டாகும் வியாதி வகைகளில் ஒன்றாகும். இதை ஆங்கிலத்தில் டியபிடிஸ் எனக் கூறுவதுண்டு. இந்த வியாதி முன்பெல்லாம் வசதி படைத்த செல்வந்தர்களுக்குத்தான் வருவதாகக் கூறி வந்தார்கள். ஆனால் தற்காலத்தில் ஏழை, பணக்காரர், பருத்தவர், மெலிந்தவர் என்ற வேறுபாடின்றி எல்லோருக்குமே இந்த வியாதி சர்வசாதார ணமாக ஏற்பட்டுவிடுகிறது.

இந்த வியாதி கண்டவர்களுக்கு மற்ற வியாதிகளும் பற்றிக் கொள்ளும். சூரிய ஒளியில் வேலை செய்யும் கடும் உழைப்பாளிகளை இவ்வியாதி பொதுவாக அணுகுவதே இல்லை. அளவுக்கு மீறிய உணவினை உட்கொண்டுவீண்பேச்சு பேசிக் கொண்டு இருப்பவர்களை இது வெகுவாக அணுகக்கூடிய வியாதியாகும். இது மனோதைரிய மற்றவர்களை மிகவும் கொடுமைக்குள்ளாக்கும் வியாதி என்பதில் சந்தேகமே இல்லை.

பொதுவாக சர்க்கரை வியாதி (மதுமேகம்) உள்ளவர்கள் அடிக்கடி சிறுநீர்கழிப்பார்கள். ஆனாலும் சிறுநீர் அடிக்கடி கழிப்பவர்கள் எல்லோருமே நீரிழிவு வியாதிக்காரர்கள் என்று சொல்லிவிட முடியாது. ஏனென்றால்,முழு அறுசுவை உணவினை முறைப்படி ஒழுங்காகச் சாப்பிட்டு வருபவர்களுக்கு உடல் தேய்மானங்கள் மிகமிகக் குறைவாகவே உண்டாகும். உடல் தேய்மானம் அதிகமிருப்பவர்களுக்குத்தான் உண்ணும் உணவும் தண்ணீரும், ஜீரணமடைந்த பின் தேய்மானங்களைப் புதுப்பிக்க அதிகமாக உறக்கமும் தேவைப்படும். நல்ல நிலைமையில உள்ளவர்களுக்கு குடிக்கும் தண்ணீர் உடல் உஷ்ண நிலையை ஒரே சீராக வைத்துக்கொள்ளப் பயன்பட்ட மீதியான நீர் சிறுநீராக அடிக்கடி வெளியேறக் கூடும். அதாவது மோட்டார் வாகனங்களில் எஞ்ஜின் சூடேறி விடாமல் இருக்க (Radiator) ரேடியேட்டரில் அவ்வப்போது தண்ணீர் ஊற்றுகிறார்கள் அல்லவா? இது போல் மனித உடல் உஷ்ணம் நடுத்தர நிலைமையிலிருக்க, நல்ல நிலைமையில் உள்ளவர்கள் தண்ணீரை அவ்வப்போது குடித்து அடிக்கடி சிறுநீர் கழிக்கலாம்.

உடல் நலத்துக்கும்உடல் வலிமைக்கும் (Strength) சர்க்கரை சத்து மிகவும் தேவையான பொருளாகும். ஆனால் இந்த சர்க்கரைச் சத்துப் பொருள் உணவில் அதிக அளவில் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்! சர்க்கரை சத்துள்ள பொருள்கள், கொழுப்புச் சத்துள்ளபொருள்கள், மாவுப் பண்டங்கள் ஆகியவற்றை உணவில் திட்டமாக (Normal Quantity) கலந்து கொள்ளலாம்.

நமது உடலில் ஒரு கோளத்திலிருந்து (Gland) இன்சுலின் முறைப்படி சுரந்து ரத்தத்தில் கலக்க வேண்டும். இந்த இன்சுலினைச் சுரக்கும் கோளம் குறைவாகவோ அல்லது அறவே சுரக்காமலோ போனால் மதுமேகம் அல்லது சர்க்கரை வியாதி நமக்கு ஏற்பட்டு விட்டதாக முடிவு செய்து கொள்ளலாம். அசதி அதிகம் உண்டா கும். சிறுநீர் பரிசோதனைக்குப் பிறகு தெளிவாகத் தெரிந்துகொள் ளலாம்.

### நோய்வராமல் இருக்க

நல்லஉடல் உழைப்பு, கசப்புக்குரிய காய்கறி, கீரைவகைகளை உணவில் சேர்த்துக்கொள்ளுதல், மன உளைச்சலைத்தரும் நிகழ்ச் சிகளில் கலந்து கொள்ளாமல் இருத் தல், தேகப்யிற்சி நாள்தோறும் சிறிது செய்தல் போன்றவைகளால் நீரி ழிவு வியாதிவராமல் தடுத்துக் கொள் ளலாம். வந்தாலும் வியாதியை அதி கமாக வளரவிடாமல் பாது காக்க, வாரம் எண் ணெய்ஸ்நானம் செய்து கொள்ளும் போது, எண்ணெய் தேய்த்துக் கொண்ட பின்னர் எரி பொருள்களால் தீ மூட்டி இதமாக அனல் காட்டி மற்றொரு நபரின் உதவியால் தேய்த்துப் புத்தரச் செய்து (Massage) கொள்ள வேண்டும். இதனால் உடலில் வயிற்றுப் பகுதியி லிருக்கும் கோளங்கள் அல்லது சுரப்பிகள் (Glands) உஷ்ணத் தைப் பெற்று நன்றாகச் சுரக்க வழியாகின்றது. தசைகளும் நரம்புகளும பலமடைகின்றன. தோலில சுருக்கங்கள் இருந்தால் நீங்கும்.

நீரிழிவு வியாதியஸ்தர்கள் காபி, டீ போன்றபானங்களைக் குறைத்துக கொள்ள வேண்டும். நலல சக்தியளிக்கும் உணவு வகைகளை, திட்டமாகச் சாப்பிட்டு வரலாம். வயிறு புடைக்க சாப்பிடக்கூடாது. உடல் நலத்திற்கேற்ற உணவுகளான கோதுமை, ராகி, புழுங்கலரிசி போன்றவைகளை அளவாகச் சமைத்துண்ணலாம். உடலுறவு முறையில் அளவுடன் இருக்க வேண்டும்.

* * * *

**கார்த்திகா**

## கொய்யாப்பழத்தின் மருத்துவ குணங்கள்

குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்குரிய ஊட்டச்சத்துக்கள் இப் பழத்தில் ஏராளம் உள்ளதால் மருத்துவ குணம் கொண்ட பழமாக கொய்யாப்பழம் விளங்குகிறது.

♦ கொய்யாப்பழம் சாப்பிடுவதால் வயிறு, குடல் சீரணப்பை, கல்லீரல்,மண்ணீரல் ஆகியவை வலிமை பெறும்.

♦ கொய்யாப்பழத்தைக் கடித்துச் சாப்பிடுவதால் பற்களும் ஈறுகளும் பலம்பெறுகின்றன.

♦ பல் முளைக்கும் குழந்தைகளுக்குத் தினமும் கொய்யாப் பழம் கொடுப்பதன் மூலம் பற்களும், ஈறுகளும் உறுதியடையும்.

♦ கொய்யாப்பழத்தில் ஊட்டச்சத்துக்கள் அதிகம்.

♦ கொய்யாப்பழம் உண்டுவரச் மலச்சிக்கல் குணமாகும். பசியை உண்டாக்கும். உணவை சீரணிக்கச் செய்யும்

♦ கொய்யாப்பழம்வயிற்றில் உள்ள மந்தத்தைக் குணப்படுத்துவதுடன் அதனைத் தினமும், காலை, மாலை சாப்பிட்டுவர மூல நோய் குணமாகும்.

# வயிற்றுப் புண்

வயிற்றுப் புண் (Ulcer) குணமாக ஆங்கிலத்தில் "அல்சர்" என்று சொல்லப்படும் குடற் புண் அல்லது வயிற்றுப்புண் எனப்படும் தொந்தரவு கொடுக்கும் வியாதி அநேகமாக பல விதமானமாற்று உணவுகளை வெவ்வேறு ஊர்களில் சாப்பிடுபவர்களுக்குத்தான், பெரும்பாலும் உண்டாவதாகத் தெரிகின்றது. இது மலச்சிக்கல் காரணமாக ஏற்படும் தோன்றக் கூடியதாகும்.

மலச்சிக்கல் ஆரம்ப காலம் முதலே இல்லாதவர்கள் இந்த வியாதியைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமே இராது. மலச்சிக்கல் ஏன் ஏற்படுகிறது? மலச்சிக்கல் ஏற்பட பொதுவான இரண்டு காரணங்களைக் கூறலாம்.
(1) பொதுவாகக் குறிப்பிட்ட நேரத்தில் மலங்கழிக்காமை.
(2) அதிக உணவை உண்ணுதல்.

### உணவு முறை:

வழக்கமாக உடம்பிற்கு ஒத்துக் கொள்ளும் சிற்றுண்டியையும், பகல் (மதிய உணவையும் அரை வயிறு ஆயார மாகவே சாப்பிட்டுவர வேண்டும். காரத்தை நீக்கிவிட வேண்டும். இரவு உணவுக்குப் பதிலாக பசும்பால் (காய்ச்சியது) 250மில்லி முதுல் 350மில்லிவரை சர்க்கரைக்குப் பதிலாக பனை வெல்லம் போட்டுக் கலக்கிக் குடித்து வர வேண்டும். ஒரு மாத காலத்திற்குப் பின்னர் எல்லாவகைச் சுவை உணவினையும்தேவைக்கு ஏற்ப உண்ணும் நிலை ஏற்பட்டு விடும். நீண்டகால வயிற்றுப் புண்(குடற்புண்) உள்ளவர்கள், தேவைப்பட்டால் மேலும் ஒரு மாதம் அல்லது ஒரு மண்டலம் தொடர்ந்து கஷாயத்தையும் உணவு முறைகளையும் பயன் படுத்திக் குணமடையலாம்.

### விளக்கம்:

(1) குறிப்பிட்ட நேரத்தில் மலங்கழிக்காமலிருப்பதால் மலக்குடலில் தங்கிய மலம் இளகிய நிலையிலிருந்து காலங்கடப்பதால் இறுகிவிடுகின்றது. இதனால் மலம் வெளியாவதில் சிக்கல் ஏற்படுகிறது.

### விளக்கம்:

(2) கவலை மற்றும் அதீத உணர்வுகளினால் வயிற்றில் அமிலங்கள் சுரக்கிறது. வெறும வயிற்றில் அமிலங்கள் சுரப்பதனால் வயிற்றில் புண் ஏற்படுகிறது. இரைப்பையின் உட்புறச்சுவர் (Lining) பாதிக்கப்படுகிறது. இதனால் செரிமானம் தடைப்படுகிறது.

இம்மாதிரியான வயிற்றுப் புண்ணால் அவதியுறுவோர்கள் கீழ்க்கண்ட மூலிகையில் கஷாயம் தயாரித்து ஒரு மாதம் அல்லது ஒரு மண்டலம் (48தினங்கள்) அருந்திவர படிப்படியாகக் குணமடையலாம்.

### கஷாயம் தயாரிப்பு முறை:

1. பிரம்ம விருட்சம் எனப்படும் அத்தி இலை - 25கிராம்
2. முற்றிய (கடு திப்பசை) வேப்பிலை - 25கிராம்
3. தண்ணீர் - 1லீட்டர்

இவைகளை கஷாயம் தயாரிப்பு முறைப்படி தயாரித்து, நாளொன்றுக்கு 100மில்லி கஷாயம் வீதம் காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வேண்டும்.

### முறை 1:

குப்பைமேனி, இலை கீழா நெல்லி இலை, அத்தியிலை, வேப்பிலை இந் நான்கு வகைகளையும் சம எடை அளவில் கலந்து மாத்திரை தயாரிப்பு முறைப்படி செய்து தினமும் காலை, பகல், இரவு மூன்று வேளையும் உணவை முடித்த பின் வேளை ஒன்றுக்கு 3 மாத்திரைகளை வாயில் போட்டு தண்ணீர் குடித்து விழுங்கி வரவேண்டும்.

இத்துடன், வெந்தயத்தை சிறிது வறுத்து இடித்து பொடி செய்து போத்தலில் நிரப்பிக்கொண்டு, தினமும் காலைஉணவுக்கு முன்பும் வேளைஒன்றுக்கு ஒருடம்ளர் தயிரில் அரைவெந்தயப் பொடியை போட்டுக்கலக்கிக் குடிக்க வேண்டும். இதுபோல் ஒருமாத காலம் சாப்பிட்டால் வயிற்றுப் புண் குண மடைந்து விடும். மேலும் விளக் கெண்ணெய், தேங்காய் எண் ணெய் சமஅளவில கலந்து காலை, இரவு உணவுக்கு முன் ஒரு தேக்கரண்டி அளவு உட்கொண்டு வரவேண்டும்.

**பொது மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்தையும் வெளிப்படையாக்குவதே கூட்டுறவு ஐரோப்பிய நாடுகள் முழுவதிலும் விளம்பரந்தான் கூட்டுறவின் முதல் நிபந்தனையாக உள்ளது.**

- நிக்கல்சன்

# பேப்பர் ரிபனில் கோன் பூ



### தேவையான பொருட்கள்


1. பேப்பர் ரிபன் மஞ்சள்
2. multibond
3. flour tape
4. கட்டுக்கம்பி
5. பு, கம்பி மஞ்சள்

**குணாளினி**

### செய்யும் முறை:

றிபனில் இதழை படம் 1 இல் காட்டியவாறு வெட்டி எடுத்தல் வேண்டும். வெட்டிய இதழில் படம் 2இல் காட்டியது போல் பு,க்கம்பியினை multibondனால் ஒட்டி எடுக்க வேண்டும். பின்பு ஒவ்வொரு இதழையும் ஒட்டி எடுத்து பின்னர் படம் 3இல் காட்டியபடி ஒட்டி எடுத்து பின்னர் பு,வாக சேர்த்து ஒட்டி எடுத்தல் வேண்டும்.

# மங்களகரமான மஞ்சள்



1. புத்தம் புதிய ஆடை உடுத்தும் போது அதன் மூலைகளில் மஞ்சளைத் தடவுவதை நீண்டகாலமாகவே பழக்கமாகக் கொண்டுள்ளனர்.
2. புதிதாக வியாபாரம் துவங்கும் போது அல்லது புதிதாக கணக்குத் தொடங்கும் போது கணக்கெழுதும் புத்தகங்களிலும் மஞ்சள் குங்குமம் வைக்கின்றனர்.
3. வீடுகளில் இறைவழிபாடு செய்யும் நாட்களில் வாயிற்படிகளிலும் வழிபாட்டு பொருள்களின் மீதும் மஞ்சளைப் பு,சிக்கொள்கின்றனர்.
4. பெண்கள் நீராடும்போது மஞ்சள் பு,சிக் கொள்கின்றனர்.
5. மஞ்சள் நிறம் கொண்டதங்க ஆபரணங்கள் பலராலும் விரும்பப்படுகின்றது.

**நெ.கவிதா**

# முடி உதிர்கிறதா?



சில மருந்துக்கள் சத்துணவு குறைவு. சிலநோய்கள் இவை முடி உதிர்வதற்கு காரணம் என்றாலும். பொதுவாக வறண்ட எண்ணைப்பசையற்ற முடியுள்ள பெண்கள் வாரத்தில் ஒருமுறையாவது முடியில் எண்ணெய்தேய்ப்பதும் அதன் பிறகு ஆவிபிடிப்பதும் அவசியம். சூடானநீரில் டவலை நனைத்துஅப்படியே தலை முடியில் கட்டிவைக்கலாம். அல்லது சுடுநீரின் ஆவிமுடியில் படும்படி முடியைப் பரப்பிவைத்துக் கொள்ளலாம். தலையில் சூடு ஏறத்தொடங்கியதும் கொஞ்சம் எண்ணெய்யை லேசாக சூடாக்கி மீண்டும் தலையில் தேய்த்து நன்றாகக் கழுவி விடவும். எண்ணெய்ப்பசை நிறைந்தவர்களுக்கு முடியும் கொட்டுவதுண்டு. இவர்கள் எண்ணெய் உபயோகத்தை முடிந்தஅளவு குறைக்கவும். இடையிடையே முடிக்கு வெறுன்னா செய்யும் போது எலுமிச்சம் நீரையோ முட்டையின் வெள்ளைக் கருவை தலையில் தடவுவது நல்லது. நல்ல சீப்பு சுத்தமான சீப்பு அவசியம். அழுத்தம் அதிகம் தராமல் முடியை வாருவது அதைவிட அவசியம்.

**தி.நந்தினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய கூட்டுறவு நிலையும் தேவைப்பாடும்

**கூட்டுறவாளர்களின் புதிய செயற்பாட்டுச் சிந்தனைகளை தூண்டிவிடக்கூடிய வகையில் அமைந்துள்ள இக்கட்டுரையை "வாத்தியாரப்பா" வெகு ஆழமாக சிந்தித்து கூட்டுறவு நிறுவனங்களின் எதிர்காலம் எத்தகையதாக இருக்குமென எழுதியுள்ளார். இதனை கூட்டுறவாளர்கள் வாசித்துப் பயனடையலாம். *(ஆசிரியர்)***

கூட்டுறவுக்குவிழா எடுக்கும் இம்மாதத்தில் கூட்டுறவு பற்றி கற்று ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கடப்பாடு சம்பந்தப்பட்டவர்கள் எல்லோருக்கும் உண்டு. விழா எடுத்தல்என்பது போட்டி வைத்தல் பரிசில்கள் வழங்கல், அலங்கரித்தல், ஆரவாரப்படுத்துதல் கம்பம்நாட்டுதல், கொடியேற்றுதல், விளக்குவைத்துதீபம் ஏற்றுதல், மேடைகளமைத்தல், பிரசங்கம்செய்தல் போன்றவைகளோடு முடிவு பெறுகின்றது. எனினும் யதார்த்தமான கூட்டுறவு பற்றி எவரும் சிந்தித்தார்களா எனில் அது மிகவும் அருமை என்றே சொல்லுதல் வேண்டும். பொதுவாக நம்மில் பலர் வருடத்தில் ஒருநாள் வரும் கூட்டுறவு தினத்தை ஒரு கொண்டாட்டமாகவே கருதுகின்றார்கள் சமூக சேவகர்கள் பலர் தம்மை மையமாக வைத்து முன்னின்று கொண்டாடி முடிக்கின்றார்கள். கூட்டுறவு எனும் இயக்கத்தின் உள்ளார்ந்த தத்துவங்கள்விளங்கிக் கொள்ளப்படாமலேயே இவைகள் நடந்தேறுகின்றன.

உண்மையில் கூட்டுறவு என்பது என்ன? இது ஒரு கலையோ, காலாசாரமோ, நாகரிகமோ, பண்பாடோ அல்ல இது ஒரு பொருளாதார முறையாகும் பொருளாதாரமுறை என்பது என்ன? மக்கள் நுகர்வுக்காக பண்டங்களும் சேவைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றின் உறபத்திக்கு உற்பத்திகாரணிகள் மிகமிக இன்றியமையாதவை. உற்பத்திக்குக் காரணமான இவ் உற்பத்திக்காரணிகள் நாட்டின் ஒரு சிலரிடத்தில் மட்டும் குவிந்திருந்து, தொகையில்லாத நுகர்வோர் என்ற வகுப்பினரின் நுகர்வுக்காக, சந்தையின் விற்பனை செய்வதற்காக அவர்களில் ஒரு சிலர் உற்பத்தி செய்வார்களாயின இங்கு உற்பத்தியும் நுகர்வும் வெவ்வேறு மக்கள் கூட்டத்தினரிடம் இருக்கக் காணப்படுகிறது. அதாவது உற்பத்தியாளன் நுகர்வோன் என்ற இருவர்க்கங்கள் இயல்பாகவே இங்கு உருவாக்கப்பட்டு விடுகின்றது. இங்கு உற்பத்தியாளன் பரோபகாரியாக இருப்பான் என்று எவரும் எதிர்பார்க்க முடியாது தன்னால் ஈடுபடுத்தப்பட்ட நிலம், மூலதனம்,உழைப்பு என்று சொல்லப்படுகின்ற உற்பத்திக் காரணிகளுக்குரிய வாடகை, வட்டி, கூலி என்பவற்றை மனதில் கொள்வதோடும் முயற்சி என்ற உறபத்திக்காரணிகளுக்குரிய இலாபம் என்ற விடயத்தில் அவ்னது அக்கறை அபரிவிதமானதாக இருக்கும். எப்பொழுதும் அவன் உசசலாபத்தை மனதில் வைத்தே செயற்படுவான். இந்த உச்ச இலாபம் பண்டங்களோடு சேர்க்கப்பட்டு நுகர்வோருக்கு மாற்றப் படுகின்றது. இவ்வாறு வைக்கப்படும் அபரிவிதமான இலாபத்தால் நுகர்வோர் தாம் நுகரும் பண்டத்துக்குரிய உண்மையான பெறும தயை விடக்கூடுதலான பணத்தை பொருளின் விலையாகக் கொடுத்து பொருட்களைக் கொள்வனவு செய்கின்றான அதாவது பொருளொன்றின் பெறுமதியை விடக்கூடுதலான பணத்தை அவன் செலுத்துகின்றான். பெறுமதியை விடக் கூடுதலாகச் செலுத்தப்பட்ட பணம் அவனிடமிருந்து சுரண்டப்பட்ட பணம் மாகும் இந்தச் சுரண்டல் தெரிந்தும், தெரியாமலும் நடைபெற்றுக்கொண்டிருககின்றது இச் சுரண்டுதலில் சுரண்டப்படும் வர்க்கம் ஒன்றாகவும் (பாவனையாளர்) சுரண்டும் வர்க்கம் இன்னொன்றாகவும் (உற்பத்தியாளன்-முதலாளி) காணப்படுவதால் இச்சுரண்டுதல் சாத்தியமாகின்றது அதாவது வர்க்கபேதம் சுரண்டுதலுக்கு அடிப்படையாகவும் வாய்ப்பாகவும் அமைந்துவிடுகின்றது. இங்கு குறிப்பிட்டது போன்ற ஒரு பொருளாதார அமைப்பு முதலாளித்துவ பொருளாதாரம் என அழைக்கப்படும்.

பொருளாதார அமைப்புக்கள் எவ்வாறு இனம் காணப்படுகின்றன என்றால் உற்பத்திக்காரணிகள் எவரிடம் இருக்கின்றன என்பதை அவதானித்தேயாகும் உற்பத்திக் காரணிகள் தனியாரிடம் இருந்து

அவர்களால் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுமாயின் அது முதலாளித்துவ பொருளாதாரம் என அழைக்கப் படுகிறது. உற்பத்திகாரணிகள் தனியாரிடமிருப்பதால் சுரண்டலுக்கு அது வசதியாக அமைந்துவிடுகின்றது என்பதனால் உற்பத்திகாரணிகளை அரசாங்கத்திடம் மாற்றி விடுவதும் உற்பத்திகளை அரசாங்கமே திட்டமிட்டு மேற்கொள்வதுமான ஒரு மாற்றும் பொருளாதார முறை முதலாளித்துவ சுரண்டலுக்கெதிராக அறிமுகப்படுத்தப்பட்டது. இப் பொருளாதாரமுறை சோசலிசயப் பொருளாதாரமுறை என அழைக்கப்படுகின்றது. நுகர்வோன், பாவனையாளன் நோக்கில் இம் முறையிலும் சில குறைபாடுகள் காணப்படுகின்றன தூய்மையான தனித்

**கூட்டுறவுப் பொருளாதார அமைப்பில் உற்பத்தியாளனே நுகர்வோனாகவும் நுகர்வோனே உற்பத்தியாளனாகவும் காணப்படுகிறான்.**

தனிமுதலாளித்துவ அல்லது சோசலிச பொருளாதார முறைகளிலுள்ள பிரதிகூலங்களைக் குறைப்பதற்காக தத்தமது கடந்தகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவ பொருளாதார முறை சோசலிசப் பொருளாதாரமுறை ஆகிய இரு பொருளாதார முறைகளையும் கலந்த கலப்புப் பொருளாதாரமுறை ஒன்றும் தற்கால நாடுகளில் அமுல் நடாத்தப்படுகின்றது. இவ்வாறக பொருளாதார முறைகள் மூன்று எவ்வாறு இனங்காணப்படுகின்ற தெனில் உற்பத்தி நோக்கி உறபத்திக்காரணிகள் எங்கும் இருக்கின்றன அல்லது விட்டு வைக்கப்பட்டுள்ளன என்பதை அவதானித்தே இனங்காணப்படுகின்றது. இதனடிப்படையில் உற்பத்திக்காரணிகள் தனியாரிடமிருப் பின் அது முதலாளித்துவப் பொருளாதார முறை என்றும் அவை நாட்டின் அரசாங்கத்திடம் இருந்து உற்பத்தி செயற்படுத்தப்படும் போது அது சோசலிசப பொருளாதாரம் என்றும் உற்பத்திக் காரணிகளும் உற்பத்தி முயற்சிகளும் அரசு,தனியார் ஆகிய இருபகுதியனரிடமும் பகிரப்பட்டுக் காணப்படுமிடத்து அது கலப்புப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகின்றது.

இம் மூன்று பொருளாதார முறைகளிலும் உற்பத்திக்காரணிகளும் உறபத்தியும் ஒரு பகுதியினர் அல்லது ஒருவர்க்கத்தினரிடமிருந்து நுகர்வோர் இன்னொரு பகுதியினராகக் காணப்படுகின்றனர் இதன் போது

**இன்றைய கூட்டுறவு இயக்கம் மக்கள் மனதிலிருந்து அந்நியப் பருத்தப்பட்டு அங்கத்தவர்களின் அக்கறை, பங்கேற்புகளின்றி செழுமையடையாது மக்களால் கை விடப்பட்ட நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் விளங்குகின்றன.**

சுரண்டலும் சுயதிருப்திக்கேற்ப பண்ட உற்பத்தி இல்லாமை போன்ற நிலைமைகளும் நிலவுகின்றன. இந்த நிலை மைககளிலிருந்து விடுபடுவதற்கு மக்கள் தமது சொந்த நுகர்வுக்கான உற்பத்தியைத் தாமே மேற்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு பொருளாதார முறையே கூட்டுறவுப் பொருளாதார முறையாகும் இக் கூட்டுறவுப் பொருளாதார முறையில் உற்பத்திக்காரணிகள் நுகர்வோரிடமேயே விட்டு வைக்கப்படுகின்றன அதாவது நுகர்வேரே உற்பத்தியாளனாகவும் அல்லது உற்பத்தியாளனே நுகர்வோராகவும் காணப்படும் முறை கூட்டுறவுப் பொருளாதார அமைப்பில் காணப்படுகின்றது அதாவது உற்பத்திக்காரணிகள் ஒரு குழுவிடமும் நுகர்வோர் இன்னெரு குழுவாகவும் அமைந்து விடும் நிலை கூட்டுறவுப் பொருளாதாரமுறையில் இல்லை இதனால் இங்கு உற்பத்திக்காரணிகளை மையமாகக்கொண்ட வர்க்க வேறுபாடுகள் இல்லாமல் போகின்றது எல்லோருமே ஒரேவர்க்கம் என்ற நிலை காணப்படுவதாலும், சொந்த நுகர்வுக்கே உற்பத்தி என்ற நிலைகாணப்படுவதாலும் தம்மைத் தாமே சுரண்ட அவசிய மற்ற நிலை காணப்படுவதாலும் அல்லது தம்மைத தாமே சுரண்ட முடியாது என்பதாலும் இக்கூட்டுறவுப் பொருளாதார அமைப்பில் சுரண்டல் என்பது இல்லாதொழிகின்றது இவ்வாறாக வர்க்க பேதமும், சுரண்டலும் இல்லாமை காரணமாகவே கூட்டுறவுப் பொருளாதார முறைக்கூட்டுறவு இயக்கம் புனிதமான ஒன்றாகமதிக்கப்பட்டு போற்றப்படுகின்றது. இதனை விடுத்து வெறுமனே ஒற்றுமை-ஒன்று சேருக் உணர்வு, நட்பு போன்ற மனிதப் பண்புகள்-அல்லது மனித நாகரிகங்கள்தான் கூட்டுறவு என்றில்லை சுருக்கமாகச்சொல்லப் போனால் உற்பத்திக்காரணிகளை தனித்தனியாக ஒன்றுதிரட்டலும் ஒன்றுதிரட்டப்பட்ட உற்பத்திக்காரணிகளை உற்பத்தியொன்றை நோக்கி செயற்பாட்டுக்கு மையப்படுத்தாதுமான வெறும் மனிதகூட்டுக்கள் கூட்டுறவாகா. இவை வெறும் கூட்டுறவு போலிகளே மனிதஉருவங்கள் கூட்டுச்சேர்த்தாலும் அதன் மூலம் உற்பத்திக்காரணகள் சேர்க்கப்படவோ அல்லது உற்பத்தியை நோக்கி அவை மைய்யப்படுத்தப்படவோ இயலாத நிலையிலேயே இப் போலி குறித்து நிற்கின்றது.

நம் நாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் அனேகமானவை அவ்வாறனவையாகவே காணப்படுகின்றன. அல்லது இன்னும் ஒருவழி சென்று முதலாளித்துவ உற்பத்திகளை அவர்களது சுரண்டுதல் விலையில் அத்தோடு கூட இடைதரகர்களுக்குரிய வைப்பசை களையும் சேர்த்து இறுதியாக நுகர்வோர்களுக்கு தட்டிவிடும் நிறவனங்களாகவே நமது ப.நோ கூ.சங்கங்கள் காணப்படுகின்றன இதன் மூலம் முதலாளித்துவ செயற்பாடுகளுக்கு முட்டுக்கொடுக்கும் முகவர்களாகவே இப்பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் காணப்படுகின்றன. இவ்வாறு செயற்பட்டுக் கொண்டுதான் மறு புறத்தில் இவை கூட்டுறவுக்கும் விழா எடுக்கின்றன போலிகள் என்று மேலே வர்ணிக்கப்பட்ட நிலையிலிருத்து விடுபடுவதற்கு எடுக்கப்படக் கூடிய ஒவ்வெரு காரியமும் தான் உண்மையில் கூட்டுறவை அதன் ஜதார்த்த நிலைக்குக் கொண்டு செல்லவும் அதன் மூலம் அதன் வர்க்க பேதத்தை இல்லாதொழித்தல், சுரண்டலை இல்லாதொழித்தல் போன்ற நிலைமைகளை உருவாக்கவும் உதவும்.

இந்நிலைமையை எப்படி உருவாக்குவது இலங்கையில் கூட்டுறவியக்கம் ஆரம்பித்ததா அல்லது ஆரம்பிக்கப்பட்டதா? பெரும்பாலும் ஆரம்பிக்கப்பட்ட தென்பதே சரியானதாகும் காலத்துக்குக் காலம் வெவ் வேறு தேவைப்பாடுகளுக்காக கூட்டுறவுச்சங்கங்கள் பல்வேறு பரிமாணங்களை எடுத்தன. கூட்டுறவுச்சங்களின் இன்றைய தேவைப்பாடு என்ன? இதைசம்பத்தபட்டவர்கள் உணராமையே கூட்டுறவு இயக்கத்தின தேக்க நிலைக்காரண மாகும் நிரந்தர பணியாளர் குழாம் தொடர்ச்சியான நிவாரணவினியோகம் பங்குதாரர்களிலிருந்து உருவாகி தனித்துவம் பெற்றுள்ள கூட்டுறவாளர்கள் குழாம் ஒன்று இவை போன்ற காரணங்களே வடபகுதியில் பாரிய கூட்டுறவு சங்கங்கள் இன்றும் நிலைபெறுவதற்கான காரணங்களாக உள்ளன இவ்வாறு இவை நிலைபெற்றாலும் கூட பொருளாதார பின்னணியுடன் கூடிய உயிரோட்டமுள்ள அமைப்பு களாக இவை இல்லை அதாவது மக்களின் இன்றைய தேவைப்பாட்டு க்கு தம்மை தயார்படுத்திக் கொண்ட அமைப்புகளாக இவை தற்போது இல்லை ஏற்கனவேகூறப்பட்டது போன்ற முதலாளித்துவ ஆக்கங்களை சகலவிதமான சுரண்டல் பெறுமதிகளையும் சேர்த்து நுகர்வோன்தலைகளில் இறுதி காகத் சுமத்தும் அமைப்புகளாக இவை காணப்படுவதால் கூட்டுறவு அமைப்புக்ளிற்கும் தனியார் அமைப்புகளிற்குமிடையே வித்தியா சத் தை காணமுடியாத நிலையில் மக்கள் கானப்படுகின்றார்கள் அதா வது கூட்டுறவு பிரத்தியேக மான தாக இன்று எதையும் மக்களிற்கு செய்யாமமையால் அதன்தேவைப பாட்டை உணரமுடி யாத நிலை யில் மக்களும் தமது தேவைப்பாட்டை செயற்பாட்டுரீதியில் இடித்து ரைக்க வலிதற்ற நிலையில் கூட்டுறவு அமைப்புகளும் காணப்படுகின்றன இதன் காரணமாக மக்கள் மன திலிருந்து கூட்டுறவுஇயக்கம் அன்னியப்படுத்தப்பட்ட நிலை காணப்படுகின்றது இதனால் அங்க த்துவ அக்கறை அங்கத்துவ பங் கேற்பு போன்றவற்றினால் சோபிக்கப்பட்ாதநிலையில் செழுமை குனறியகைவிட்டப்பட்ட நிலையில கூட்டுறவு சங்கங்கள் விளங்குகின் றன


இந்நிலையில் இருந்து கூட்டுறவு நிறுவனங்கள் தம்மை மீட்டெடுக்கலாம்? மக்களது தேவைகள் இனங்கானப்பட்டு இத் தேவைகள் தனித்துவமான பாணியில் நிறைவேற்றி கொடுப்பனவாக இவ்வமைப்புகள்மாற்றப்படவேண்டும் அவ்வாறு செய்யும்போதுதான் கூட்டுறவு நிறுவனங்கள் தொடர்பில் அக்கறை என்பது உருவாகும் இது பின்னர் அங்கத்துவஅக்கறையாக மாறும்.

அங்கத்துவ அக்கறை

**வாத்தியாரப்பா**

யை ஸ்திரமான ஒன்றாக மாற்றுவதறகு கூட்டுறவுஅமைப்புகள் தத்தமது சொந்த மூலதனத்தில் இயங்க வேண்டியது பெரிதும் விரும்பத்தக் கது இதற்காக கூட்டுறவு இயக்க ங்களின் பங்கு ஒன்றின் பெறுமதியை ஆயிரங்களாக மாற்றுவது இன்றி யமையாதது பங்குப் பெறு மதி கூட கூட அங்கத்துவ அக்கறை உயிர்த்துடிப்புடன் கணப்படும் இந் நிலமை அங்கத்துவ பங்கேற்பை வலுவுள்ளதாக்கும்.

விசேடமாக சிலவகைச் சிக்கனகடனுதவி கூட்டுறவு சங்கங்கள் தவிர ஏனைய கூட்டுறவு அமைப்புகளின் பொறுப்புகள் வரையறுக்கப்பட்ட உத்தரவாதத்துடன் கூடியனவாக காணப்படுகின்றன வரையறுக்கப்பப்பட்ட உத்தரவாதம் என்பது அங்கத்தவர்களிடத்தில் ஏனோ தானோ என்ற ஒரு மனப்பான்மையை உருவாக்கி விடுகின்றது இம்மனப்பான்மையும் கூட்டுறவு இயக்கத்தின் வீழ்ச்சிக்கு ஒரு அடிப் படையாக அமைகிறது எனவே உத்தரவாம் வரையறுக்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும். (வளரும்)



பருத்தித்துறை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமும், பணியாளர் நலன்புரிச் சங்கமும் இணைந்து நடத்திய பிரிவுபசார விழாவை சங்கத் தலைவர் சி.சிவகுமார், கூட்டுறவு அபிவிருத்தி உதவியோகத்தர் பொன். மோகன் ஆகியோர் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், வடமராட்சி கொத்தணித் தலைவர் கா. குணராசா உரையாற்றுவதையும், இளைப்பாறிய கிளை மேற்பார்வையாளர் கு. இராசரத்தினத்திற்கு [illegible] அணிவிப்பதையும், சி.க. சபாரத்தினத்திற்கு (இளைப்பாறிய கிளைமுகாமையாளர்) ஆ. அழகரத்தினம் தங்கச்சங்கிலி அணிவிப்பதையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 81 ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா
# மாகாண மட்டபாடசாலைகளுக்கிடையே
# நடத்தப்பட்ட போட்டி முடிவுகள்

81ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண மட்ட பேச்சு, கட்டுரை, சித்திரம் மற்றும் வினாடி - வினா போட்டிகளின் முடிவுகள் வருமாறு.

**பேச்சு (பிரிவு 10, 11)**

1ஆம் இடம் - கே.வேணுகோபன் - ம/சிவானந்தா மகா.வித்தி. 2ஆம் இடம் - ஆர்.ராஜீவ்காந் - தி/ஆர்.கே. எம். கோணேஸ்வரா இந்துக்கல்லூரி. 3ஆம் இடம் - ரி.ஹர்சன் - யா/மத்திய கல்லூரி.

**(பிரிவு 12,13)**

1ஆம் இடம் - பா.சிந்துஜா - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி. 2ஆம் இடம் - செ.பிரியதர்சினி - தி/சென்மேரி கல்லூரி. 3ஆம் இடம் - எம்.முரளிதாஸ் ம/சிவானந்தா மகா வித்தி.

**கட்டுரை (பிரிவு 10,11)**

1ஆம் இடம் - ச.திவ்யா - தி/சென்மேரி கல்லூரி. 2ஆம் இடம் - கே.தாட்சாயனி - யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி 3ஆம் இடம் - வி.நிலக்ஷினி - ம/செட்டிபாலயம் மகா வித்தி.

**(பிரிவு 12, 13)**

1ஆம் இடம் - ஜே.ஜொனிலா - ம/மகாஜனாக் கல்லூரி. 2ஆம் இடம் - வி.ஜெனிற்றா வினோஜினி - தி/சென்மேரிஸ் கல்லூரி. 3ஆம் இடம் - கே.கிரிதரன் யா/மத்திய கல்லூரி.

**ஆங்கிலக் கட்டுரை (பிரிவு 10,11)**

1ஆம் இடம் - ஞா.பிரசாந்தி - வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தி. 2ஆம் இடம் - ந.நிருத்யா - தி/ஸ்ரீசண்முகா இந்து மகளிர் கல்லூரி.

**(பிரிவு - 12,13)**

1ஆம் இடம் - ஜே.ரமேஷ் ம/சென் மைக்கல் கல்லூரி. 2ஆம் இடம் - ரி.தனுஜா - தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி.

**சித்திரம் (பிரிவு - 10,11)**

1ஆம் இடம் - எஸ்.தபோதனன் தி/ஆர்.கே.எம்.கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. 2ஆம் இடம் - கே.சுதர் சன் - க/பாண்டிருப்பு மகா வித்தி. 3ஆம் இடம் - கே.ஷனிக்கா டிலக் காணி - வ/மதுக்கந்தா மகா - வித்தி.

**(பிரிவு - 12,13)**

1ஆம் இடம் - ஆர்.சரவணபவான் - வ/தமிழ்மகா வித்தியாலயம். 2ஆம் இடம் - எம்.சுமன் - தி/ஆர். கே.எம். கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. 3ஆம் இடம் - எஸ்.ஜஸ்மின் கர்மிலா - யா/திருக்குடும்ப கன்னியர் மடம்.


**வினாடி - வினா**

1ஆம் இடம் - தி/கிரான்குளம் விநாயகர் ம.வி. 2ஆம் இடம் - யா/இந்து மகளிர் கல்லூரி. 3ஆம் இடம் - வ/தமிழ் மகா வித்தி.

4ஆம் இடம் - தி/கிண்ணியா அல்.அக்ஷா கல்லூரி.

சங்கப் பணியாளர்களிடையே நடத்தப்பட்ட வினாடிவினாப் போட்டி முடிவுகள்,

1ஆம் இடம் - ஈச்சந்தீவு கண்ணன்குடா பல.நோ.கூ.ச. 2ஆம் இடம் - வவுனியா ரி.சி.சி.எஸ். ஒன்றியம். 3ஆம் இடம் - அக்கரைப்பற்று தெற்கு பல.நோ.கூ.ச.



81 ஆவது சர்வதேச கூட்டுறவுதின விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே நாடத்தப்பட்ட மாகாணமட்ட வினாடி வினாப் போட்டியில் 2ஆம் இடம் பெற்ற யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளை படத்தில் காணலாம். இடமிருந்து வலமாக செல்விகள் சுபாஜினி இராஜேந்திரம், நிலக்ஷி மகாதேவன், சரிதா கந்தசாமி, ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன் (தலைவி).

ஆண்டு 10,11
மாணவர்களுக்கிடையே
மாகாண மட்டத்தில்
நடத்தப்பட்ட பேச்சுப்
போட்டியில் 2ஆம் இடம்பெற்ற
யாழ். மத்திய கல்லூரி
மாணவன்

செல்வன
**தெ.ஹர்சன்**





ஆண்டு 10,11
மாணவர்களுக்கிடையே
மாகாண மட்டத்தில்
நடத்தப்பட்ட கட்டுரைப்
போட்டியில் 2ஆம் இடம்பெற்ற
யாழ். சாவகச்சேரி மகளிர்
கல்லூரி மாணவி

செல்வி
**கே.தாட்சாயனி**

ஆண்டு 12,13
மாணவர்களுக்கிடையே
மாகாண மட்டத்தில்
நடத்தப்பட்ட கட்டுரைப்
போட்டியில் 3ஆம் இடம்பெற்ற
யாழ். மத்திய கல்லூரி
மாணவன்

செல்வன
**கே.கிரிதரன்**




## விசேட பயிற்சி நெறி

யாழ். மாவட்ட மகளிர் குழுவினால் கொழும்பில் இருந்து வரவழைக்கப்படவுள்ள போதனாசிரியர்களினால் விசேட பயிற்சி நெறி ஒன்று நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன பயிற்சி பெற விரும்பும் மகளிர்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:-

**செயலாளர்**

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, (2ஆவது மாடி)
இல.12, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


## 147ஆவது குலுக்கலில் பரிசுபெற்றோர் விபரம்

அமரர் எஸ்.ஞானப்பிரகாசம் ஞாபகார்த்தமாக யாழ். மாவட்ட சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்ட 147 ஆவது குலுக்கலில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:-

பா.புவனேஸ்வரி - கைதடி பராசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் சாவகச்சேரி.

சி.சகுநதலாதேவி - கலைச்செல்வி மகளிர் சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் தெல்லிப்பளை.

த.சாமந்தி - நவாலி முருகானந்தா சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம் சண்டிலிப்பாய்.

## விபத்து...

தியேகு 1000 ரூபா, ம. அலோசியஸ் 1000 ரூபா, செ. சந்தியேகு 1000 ரூபா, பி. டொமினிக் 1000ரூபா.

**கரவெட்டி**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

கி.யோகநாதன் 2000ரூபா.

**சாவகச்சேரி**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

க.கனகலிங்கம் 1000 ரூபா, மா.தங்கராசா 1000 ரூபா, இராசகுமார் 1000 ரூபா, வ. சிவஞானம் 1000 ரூபா, வ.சுந்தரலிங்கம் 1500ரூபா.

**சுன்னாகம்**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

ஐ.இராசேந்திரம் 750 ரூபா, பொ. தயானந்தம் 750ரூபா, இ.சண்முகலிங்கம் 1584 ரூபா, க.கந்தையா 2236 ரூபா, மு.கனகு 1607 ரூபா, மூா.அருமைத்துரை 5000 ரூபா.

**அரியாலை**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

வி.எஸ்.கந்தையா 4742 ரூபா, க.ஜயாத்துரை . 1361ரூபா.

**பண்டத்தரிப்பு**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

அ.டொன்பொஸ்போ 750 ரூபா, பா.துரைராசா 1000 ரூபா, அ. திருச்செல்வம் 1053ரூபா.

**தெல்லிப்பழை**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

வ.நவரத்தினம் 1000 ரூபா,

**பருத்தித்துறை**
**ப.தெ.வ.அ.கூ.சங்கம்**

செ.ரஜனிகாந்த் 1000 ரூபா.

**வட.ப.தெ.வ.கூ.நி.பேரிணையம் (கிளிநொச்சி)**

செ.இரத்தினம் 1000 ரூபா, வெ. மார்க்கண்டு 1000 ரூபா, மு.திரவியம் 1000ரூபா, து.சுவாம்பிள்ளை 1000 ரூபா, வீரசிங்கம் 1000 ரூபா.

## குந்தவையின் சிறுகதைத் தொகுதி
## சாந்தனின் கவிதை வெளியீட்டு விழா

கட்டைவேலி நெல்லியடி பல. நோ.கூ.சங்க கலாச்சார கூட்டுறவுப் பெருமன்றம் குந்தவையின் ''யோகம் இருக்கிறது'' என்னும் சிறுகதைத் தொகுதி அறிமுக விழாவும், எழுத்தாளர் ஐ.சாந்தனுடைய ''தொடர்ந்திருத்தலும் எளிய பொருட்களும்'' எனும் ஆங்கில மொழி மூலமான கவிதைத் தொகுதி அறிமுக விழாவும் வெகு சிறப்பாக நடத்தியது.

சங்கத்தின் தலைவர் திரு.க. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விழாக்களில கூட்டுறவுக் கலாச்சாரப் பெருமன்றப் பொருளாளர் திரு.செ.சதானந்தன், சங்க மகளிர்குழுத் தலைவி பண்டிதை திருமதி வ.பத்தினிப்பிள்ளை, குப்பிளான் ஐ.சண்முகம், திரு.எஸ்.இராஜகோபால் (செம்பியன் செல்வன்) ''அலை'' ஆசிரியர் திரு.க.யோகராஜா மற்றும் எழுத்தாளர்கள் தெணியான், இராஜேஸ்வரன் திரு.சு.இராகவன், யாழ். பல்கலைக் கழக ஆங்கிலத் துறை விரிவுரையாளர் திரு.வை. சுந்தரேசன் யாழ். பலகலைக் கழக முகாமைத்துவ வருகை விரிவுரையாளர் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## கூட்டுறவு தின விழா

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி இம்மாதம் 27 ஆம் திகதி 81 ஆவது சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தை வெகு விமரிசையாக கொண்டாட தீர்மானித்துள்ளது.

இதனையொட்டி தனது அங்கத்துவ சங்கங்களின் அங்கத்தவர்கள், பணியார்கள் மகளிர் குழுக்கள் முன்பள்ளி ஆசிரியைகள் ஆகியோருக்கிடையே தனித்தனியாக பேச்சு, கவிதை, கட்டுரை ஆகியவற்றில் போட்டிகளைநடத்த ஏற்பாடு செய்துள்ளது.

## கணனிக் கருத்தரங்கு

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் கணக்குகளை கணனி மயப்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை யாழ்மாவட்ட கூட்டுறவுச்சபை எடுத்துள்ளது. வடக்கு - கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் ஒத்துழைப்புடன் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளது.

கூட்டுறவுக் கிராமிய வங்கிகளில் வேலை செய்யும் கணனியுடன் தொடர்பு டைய உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

## கூட்டுறவு...

லும் கூட்டுறவு கொள்கைகளைப் பரப்பும் விழாவாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

ஆரவாரமின்றி பெரியளவிலான விழாக்கள் விடுத்து இம்மாதத்தில் கூட்டுறவு இயக்கத்தில் புதிதாக எவ்வளவு அங்கத்தவரை இனைக்க முடியுமோ அவ்வளவுக்கு அதிகமான அங்தவரை சேர்த்து கொள்ள முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும் எதிர்காலத்திலன் சிற்பிகளாகவுள்ள இளைஞர்களையும் யுவதிகளையும் இந்த இயக்கத்தில் இணைத்து புதியதோர் கூட்டுறவு உலகத்தை உருவாக்குவதற்கு அனைத்து கூட்டுறவாளர்களும் திடசங்கற்பம் பூண்டு நலிவுற்றுப் போகும் கூட்டுறவு இயக்கத்தை கட்டியெழுப்ப முன்வர வேண்டும்.

## வினைத்திறன்...

உருவாக்குவதற்கு வழங்கி வருகிறது.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையினால் கணனிப் பயிற்சி நெறியின் 3ஆவது தொகுதியை ஆரம்பித்து வைத்து பேசிய கூடடுறவுச் சபைத் தலைவர் திரு. பெ.கனகசபாபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நனது கல்வி விஸ்தரிப்பு வேலைகளை திறம்பட நடத்துவதற்கு இது போன்ற பல பயிற்சிகளை அளித்து வருகிறது. கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியை நடத்தி வரும் கூட்டுறவுச் சபை கூட்டுறவு நிறுவனங்களில் வினைத்திறனுள்ள பணியாளர்களை உருவாக்குவதற்கு, கனிஷ்ட, சாதாரணதர, உ[illegible]தர பரீட்சைகளை நடாத்தி வருகிறது. இன்றைய சூழ்நிலையில் இக்கணனிப் பயிற்சி நெறிக்கு கூட்டுறவு நிறுவனங்களில் இருந்து போதிய அளவு பணியாளர்கள் பங்குபற்றாமையினால் பிரத்தியேகமாக வெளிவாரி மாணவர்களையும் இப்பயிற்சி நெறிகளில் இணைத்துள்ளோம். எதிர்காலத்தில் கூட்டுறவு நிறுவனங்களில் வேலை வாய்ப்பு ஏற்படும்போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்கக்கூடிய ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவுள்ளோம என்று கூறினார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்டக் கூட்டுறவுச்சபைச் செயலாளர் திரு. எஸ்.சிவசுப்பிரமணியம், கணனிப் போதனாசிரியர்கள் எஸ்.பத்மனாதன், எஸ்.சிவகௌரி ஆகியோரும் கலந்து கொண்டனர்.


**ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு**

## நினைவலைகள்

தாயின் மடியில
1935
04
09



ஆண்டவன் அழைப்பில்
2003
05
31

"தந்தை சொல்மிக்க மந்திரமில்லை"

குடும்பத்தினர் சார்பில்
**திருஞானம் ஞானசீலன்**
(யா.மா.கூ.சபை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை அச்சகத்தில் அச்சிட்டு இல:12 காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் 2ஆம் மாடியில் இயங்கும் யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபையினால் 2003ஆம் ஆண்டு ஜூலை மாதம் வெளியிடப்பட்டது.